தேனீ இணையத்தளம்
www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de
Online Newspaper in Tamil Vol.10 06.11.2012





# புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (72)

### 72. புலிகளின் ஊடுருவல்களால் சீரழிக்கப்பட்ட இயக்கங்களும், புலிகளுக்கு சேவகம் செய்த ஐந்தாம் படைகளும்!




புலிகள் என்னைக் கடத்திவந்து இந்த ஆனைக்கோட்டை முகாமுக்குக் கொண்டு வந்த நாளிலிருந்து, காலையும் மாலையும் என அநேகமாக எல்லா நாட்களும் நான் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். தயாபரன் என்பவன் தான் எனது பிரதான விசாரணையாளன். இடையிடையே வெளியிலிருந்து வரும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த முக்கியமானவர்களும் வந்து ஏதாவது கேட்டுச் செல்வார்கள். தவிர இதே முகாமில் உள்ள முக்கியமானவர்களாக சேவியர், சாள்ஸ், அம்புறோஸ் போன்றவர்களும் விசாரிப்பார்கள். காந்தி வாரத்தில் இரு முறையாவது கூப்பிட்டு விசாரிப்பான்.

புலிகளது விசாரணைகள் சுற்றிச் சுற்றி என்.எல்.எப்.ரி - பி.எல்.எப்.ரி இயக்கங்கள் சம்பந்தமாகவே கூடுதலாக இருக்கும். அது தவிர யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள்ளும், வெளியிலும் தமக்கு எதிரானவர்கள் யார் யாருடன் எனக்குத் தொடர்புகள் உண்டென்பதும் புலிகளது விசாரணைகளின் போது இடம் பெறும்.

புலிகளது விசாரணைகளில் இருந்து ஒன்றை என்னால் அவதானிக்க முடிந்தது. அதாவது நான்தான் என்.எல்.எப்.ரி - பி.எல்.எப்.ரி இயக்கங்களை மறைமுகமாக வழி நடாத்தி வந்த முக்கியமான நபர் என புலிகள் கருதினார்கள். அதை எப்படியும் நிரூபித்து விட வேண்டும் என்பதில் பலத்த பிரயத்தனங்களில் ஈடுபட்டனர். ஏனெனில் புலிகளைப் பொறுத்தவரை எமது கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகளை விடத் தமக்கு எதிரான ஆயுதப் போராட்ட இயக்கங்களைத்தான் தமது உடனடிப் பிரதான எதிரியாகக் கருதினார்கள். எனவே எப்படியும் என்.எல்.எப்.ரி - பி.எல்.எப்.ரி இயக்கங்களின் ஒரு சாதாரண அங்கத்தவர் என்றாவது என்னை நிரூபித்துவிட்டால், என்.எல்.எப்.ரி இலிருந்த ரமணி (செல்வகுமாரன்) மற்றும் என்.எல்.எப்.ரி - பி.எல்.எப்.ரி இலிருந்த அனரன் (விவேகானந்தன்) ஞானம் (ரஜீஸ்) போன்றவர்களுக்குச் செய்தது போல எனக்கும் செய்துவிட்டு, 'அவர் ஆயுதம் தாங்கிய எதிர் இயக்கத்தைச் சேர்ந்தவர்' என எனது கதையையும் முடித்து விடலாம்.

ஆனால் என்னதான் புலிகள் முயன்ற போதிலும், என்.எல்.எப்.ரி - பி.எல்.எப்.ரி இயக்கத்திலோ அல்லது வேறு எந்தவொரு இயக்கத்திலோ நான் ஸ்தாபன ரீதியிலான தொடர்புகள் கொண்டிருந்ததிற்கான சான்றுகளை புலிகளால் திரட்ட முடியவில்லை. அத்துடன் புலிகள் எனக்குத் தண்டனை தந்தாலும் பரவாயில்லை என்ற திடமான நிலைப்பாட்டில் இருந்த நான், தமிழீழ கருத்தையும் நிராகரித்தே தொடர்ந்து கதைத்து வந்தேன். அத்துடன் நாங்கள் குறுகிய கண்டோட்டம் கொண்ட தேசியவாதிகள் அல்ல, பரந்த கண்ணோட்டம் உள்ள சர்வதேசியத்துவவாதிகள் என்பதையும் தெளிவுபடுத்தி வந்தேன். ஆனால் என்னவோ தெரியவில்லை, எனது விசாரணைகளின் போதும் சரி, என்னை விடுதலை செய்தபோது கபிலம்மான் மூன்று மணித்தியாலங்கள் என்னுடன் உரையாடிய போதும் சரி, நான் தமிழீழக் கருத்தை ஏற்கவில்லை என்பதைத் தெளிவாகக் கூறியபோதும், புலிகள் அந்தக் கருத்தை ஏற்கும்படி என்னை மிரட்டவோ அல்லது என்மீது அதைத் திணிக்கவோ முயற்சிக்கவில்லை.

உண்மையிலும் கூட எனக்கு என்.எல்.எப்.ரி இயக்கத்துடன் ஸ்தாபன ரீதியான தொடர்புகளோ அல்லது அரசியல் ரீதியான உடன்பாடோ இருக்கவில்லை. தோழர் வி.விசுவானந்ததேவன் எமது கட்சியினால் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியைத் தனியாகக் கொண்டு சென்ற போது, எமது கட்சி அன்றைய சூழ்நிலையில் தீவிரமடைந்து வந்த தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு உரிய முறையில் முகம் கொடுக்காததுடன், செயலற்ற ஒரு நிலைமைக்கும்; போய்விட்டது என்ற குற்றச்சாட்டையே பிரதானமாக முன் வைத்தார்.

மார்க்சிச - லெனினிசவாதிகளான நாம் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியை உருவாக்கும் போது, மிகவும் அவதானத்துடனேயே அதைச் செய்தோம். நாடு தழுவிய பிரதான பிரச்சினைகளில், தேசிய இனப் பிரச்சினையை ஒரு முக்கியமான பிரச்சினையாகவே பார்த்தோம். ஏகாதிபத்தியம் மற்றும் அதன் உள்நாட்டு அடிவருடிகள் (ஐக்கிய தேசியக் கட்சியும் பிற்போக்குத் தமிழ் தலைமையும் கொண்ட கூட்டு) கொண்ட மக்கள் விரோத சக்திகளுக்கும், பரந்துபட்ட இலங்கை மக்களுக்கும் இடையிலான முரண்பாடே, இலங்கையின் பிரதான முரண்பாடு என்பதே அன்றும் இன்றும் எமது கருத்தாகும்.

இனங்களுக்கிடையிலான சிநேக முரண்பாட்டை பகைமை முரண்பாடாகக் காண்பதும், அதற்குத் தீர்வாக தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைக்க வேண்டும் என்று தவறாகத் தீர்மானிப்பதும், அதற்காக ஆயுதம் தாங்கிப் போராடுவதும் தவறானது என்பதே எமது அப்போதையதும் இப்போதையதும் கருத்து நிலையாகும். எமது இந்தச் சரியான கருத்து, 30 வருடம் பெருமளவு இரத்தம் சிந்தி நடாத்திய ஆயுதப் போராட்டத்தின் பின்னர், அது மிகச் சரியான ஒரு நிலைப்பாடு என்பதை வரலாறு ஐயம் திரிபற நிரூபித்துள்ளது. அதற்காக நானும் எமது கருத்தில் கடைசிவரை ஊன்றி நின்ற தோழர்களும் நியாயமாகப் பெருமைப்பட முடியும்.

ஆனால் தோழர் விசுவானந்ததேவனும் வேறு சில கட்சித் தோழர்களும், கட்சியின் இந்தச் சரியான நிலைப்பாட்டைத் தொடராமல் வழி தவறிப்போனதே, அவர்களது தோல்விக்கும் அழிவுக்கும் காரணமாய் அமைந்துவிட்டமை மிகவும் துயரமான சம்பவம். அவர்கள் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் பெயரை தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (N.L.F.T) என மாற்றி தமிழீழம் என்ற தவறான கருத்தை ஏற்றுக் கொண்டதுடன், அதற்காக ஆயுதம் தாங்கிப் போராடுவது எனவும் தீர்மானித்துக் கொண்டனர். இது கட்சியின் அடிப்படை நிலைப்பாட்டுக்கு நேர் எதிரானது.

அவர்கள் இந்தத் தவறான முடிவை எடுத்ததின் காரணமாக தீவிர தமிழ் தேசியவாதிகளின் இயக்கமாக என்.எல்.எப்.ரி மாறியதுடன், இப்பொழுது ஆராய்ந்து பார்க்கையில் புலிகள் ஊடுருவக் கூடிய ஒர் இயக்கமாகவும் மாறிவிட்டது என்பது புலனாகின்றது. அதற்குள் ஊடுருவிய புலி சார்பான சக்திகள், தேசிய இன விடுதலைக்குப் போராடுவதே பிரதான நோக்கம் என ஆரம்பிக்கப்பட்ட அந்த இயக்கத்தின் கொள்கைகளை மாற்றியதுடன், தோழர் விசுவானந்ததேவனைத் தனிமைப்படுத்தி, அவரை என்.எல்.எப்.ரி இயக்கத்திலிருந்து வெளியேற்ற முயன்றனர்.

நாட்டில் தேசிய இனப் பிரச்சினை கொழுந்துவிட்டு எரிகையில், மார்க்சிச - லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி அது பற்றிக் கவனம் செலுத்தாமல் வர்க்கப் போராட்டம் என்று சொல்லிக்கொண்டு, பழைய முறையில் செயல்படுவதாகக் குற்றம்சாட்டியே என்.எல்.எப்.ரியை உருவாக்கியவர்கள், சடுதியாக இப்பொழுது தேசிய இனப் பிரச்சினையை விட, கிராமங்களில் வர்க்க எதிரியான நிலப்பிரபுக்களை ஒழித்துக்கட்டி, கிராமங்களில் 'செந்தளங்களை' நிறுவ வேண்டும் என்ற அதிதீவிர இடதுசாரி நிலைக்குத் தாவியது, அனுபவமற்ற சிறுபிள்ளைத்தனமா அல்லது திட்டமிட்ட சீர்குலைவு நடவடிக்கையா என்பது ஆராயப்பட வேண்டிய விடயம்.





[BBC](#)
[Newsnow](#)

ஆனால் இந்த நிலைப்பாடு தவறு என்றும், நாம் சீனப் புரட்சியின் நகலாகவும், நக்சல்பாரி இயக்கத்தின் தாக்கம் காரணமாகவும், 1960களில் இந்த வகையான வேலைப்பாணியை கிளிநொச்சிப் பிரதேசத்தில் கைக்கொண்டு தோல்வி கண்டவர்கள் என்பதை நான் அந்த இயக்கத்தின் சில பிரதான தோழாகளிடம் எடுத்து விளக்கியும், அவர்கள் அதற்குச் செவி சாய்க்கவில்லை.

என்.எல்எப்.ரியின் மத்திய குழுவிலும் இந்த புலி சார்பானவர்களின் கை ஓங்கி இருந்ததால், விசுவானந்ததேவனும், அவரது கருத்தை ஆதரித்தவர்களும் வேறு வழியின்றி இயக்கத்தை விட்டு வெளியேறி தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி (P.L.F.T) என்ற அமைப்பை உருவாக்கினர். ஆனால் அவர்களும் தமிழீழம் என்ற சொல்லைக் கைவிட்டுவிடவில்லை.

என்.எல்.எப்.ரியில் எஞ்சி நின்றவர்கள் எல்லோருமே புலி விசுவாசிகளோ அல்லது தீவிர தமிழ் தேசியவாதிகளோ என்று நான் சொல்லமாட்டேன். முக்கியமாக ரமணி என்று அழைக்கப்படும் செல்வகுமாரன் போன்றவர்கள் உண்மையில் அர்ப்பண உணர்வுடன் தான் செயற்பட்டனர். பொலிகண்டியைச் சேர்ந்த அவர் அந்தக் கிராமத்தில் மிக நீணடகாலம் எமது கட்சியுடன் இணைந்து செயல்பட்ட, காலஞ்சென்ற குணேந்திரராசா என்ற தோழரின் மருமகனாவார். எனவே அந்த இயக்கத்தில் மற்றவர்களுக்கு இல்லாத ஒரு இடதுசாரிப் பின்னணி அவருக்கு இருந்தது. அவர் மருத்துவ பீடத்துக்கு கல்வி கற்பதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தும், அதை பெரிதாக எடுக்காமல் என்.எல்.எப்.ரி இயக்கப் பணிகளில் தீவிரமான ஈடுபட்டார்.

இந்த ரமணியைப் பற்றியும் காந்தி என்னிடம் சில தடவைகள் விசாரித்தான். ஏற்கெனவே ரமணியைக் புலிகள் கடத்தியிருந்தார்கள். காந்தி என்னிடம் ரமணியைப் பற்றி விசாரிக்கும் போது, ரமணியை உயிருடன் வைத்திருந்தார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவரை நான் கடைசியாகச் சந்தித்தது இன்றும்கூட பசுமையாக என் மனதில் இருக்கின்றது. புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திலீபன் உண்ணாவிரதம் இருந்து இறந்த அன்று, தற்செயலாக யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் சந்தித்த நாம், சிறிது நேரம் உரையாடினோம். அந்தச் சிறிது நேர உரையாடலில் என்.எல்.எப்.ரிக்குள் இடம்பெற்ற பிளவு குறித்து எனது கவலையை அவரிடம் தெரிவித்ததுடன், பிளவு ஏற்பட்ட பின்னர் என்.எல்.எப்.ரி இயக்கம் புலிகளுக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுத்தது பாரிய தவறு என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

அதற்கு அவர் தந்த விளக்கம் எனக்கு மேலும் அவநம்பிக்கையை என்.எல்.எப்.ரி மீது ஏற்படுத்தியது. அதாவது சிங்களப் பேரினவாதத்திலிருந்து தமிழ் மக்களை விடுவித்து, தற்காலிகமாக சோசலிச அடிப்படையிலான ஒரு தமிழீழ அரசை உருவாக்குவது அவசியம் என்றும், பின்னர் தென்னிலங்கையிலும் ஒரு சோசலிச அரசு உருவான பின்னர் இரண்டு அரசுகளும் ஒரு சமஸ்டி ஆட்சியின் கீழ் ஒன்றிணையலாம் என்றும் அவர் கூறினார். எனவே தமிழ் மக்களுக்கு ஒரு தனியரசை உருவாக்கும் போராட்டத்தில் உள்ள இயக்கங்களிலே பலமானதும், சொந்தக் காலில் நிற்பதுமான புலிகளுடன் ஒரு ஐக்கிய முன்னணி அமைத்துப் போராடுவதே தமது இயக்கத்தின் கொள்கை எனக் கூறினார். அதற்கு உதாரணமாக, யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அந்த நாட்டின் பிற்போக்கு கோமின்டாங் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட ஐக்கிய முன்னணியை சுட்டிக் காட்டினார்.

இந்த நிலைப்பாடு அடிப்டிடையிலேயே தவறானது என்பதை நான் சுட்டிக் காட்டினேன். சீனாவில் நடந்தது யப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம். ஆக்கிரமிப்பாளன் வெளி நாட்டு ஏகாதிபத்தியம். அவன் ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லருடனும், இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியுடனும் கூட்டு வைத்து உலையே கபளீகரம் செய்ய முயன்று கொண்டிருந்தான். இலங்கையில் உள்ள பிரச்சினை ஒரே நாட்டுக்குள் உள்ள இனப் பிரச்சினை. சிநேக முரண்பாடான பிரச்சினை. எனவே சீனாவின் போராட்டத்தையும், இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்தையும் ஒப்பிடுவது அபத்தமானதாகும் என விளக்கினேன்.

அடுத்தது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கிருந்த வலதுசாரி கோமின்டாங் கட்சியுடன் ஐக்கிய முன்னணி அமைத்த போது, அதனிடம் மிகப்பெரும் தளப் பிரதேசமும், பலம் வாய்ந்த ஆயுதப் படைகளும் இருந்தன. அதனால் சம நிலையில் பேரம் பேசும் பலம் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு இருந்தது. ஆனால் நமது நாட்டிலோ புலிகளின் பலத்துடன் ஒப்பிடுகையில், புலிகள் யானை போன்றும், என்.எல்.எப்.ரி எறும்பு போன்ற நிலையில் இருக்கின்றன. அத்துடன் புலிகள் வேறு எவருடனும் கூட்டுச் சேரும் நிலையில் இல்லையென்பதுடன், மற்றைய எல்லா இயக்கங்களையும் அழித்துவிட விரும்புகின்றனர் என விளக்கினேன். அந்த நேரத்தில் திலீபன் மரணித்த செய்தி யாழ்.பஸ் நிலையத்தில் இருந்த 'மணிக்குரல்' விளம்பர சேவையில் அறிவிக்கப்பட்டுவிட்டதால், நானும் தோழர் ரமணியும் பிரிந்து செல்ல வேண்டி வந்துவிட்டது. அதுதான் அவருடனான கடைசிச் சந்திப்பாக இருக்கும் என அன்று நான் கருதியிருக்கவில்லை.

எனது கருத்தை அந்த நல்ல தோழரான ரமணி அன்று ஏற்கவில்லை. புலிகளுடன் ஐக்கிய முன்னணி அமைத்துப் போரிட முடியும் என அப்பாவித்தனமாக நம்பிய அவரைப் புலிகள் பின்னர் கடத்தி, வதைத்து தீர்த்தும் கட்டி விட்டனர். இதில் வேதனையானதும், சந்தேகத்துக்கு இடமானதுமான விடயம் என்னவெனில், என்.எல்.எல்.ரி இயக்கத்தின் மத்திய குழுவில் புலிகள் இயக்கத்திலிருந்தும், 'தொழிலாளர் பாதை' நடாத்திய ரொட்ஸ்கியவாத இயக்கத்திலிருந்தும் வந்தவர்களும் மற்றும் சிலரும் முக்கிய பொறுப்பில் இருந்தனர். இவர்கள் தான் அன்று விசுவானந்ததேவனுக்கு எதிரான சதித் திட்டங்களை உருவாக்கியவர்கள். இப்போது இவர்கள் பாதுகாப்பாக லண்டனிலும், சென்னையிலும், கொழும்பிலும் பாரீசிலும் இருந்து கொண்டு புலிகளுக்காக வேலை செய்கின்றனர். ஆனால் விசுவானந்ததேவன், அன்ரன், ரமணி, ஞானம் போன்ற அர்ப்பணிப்புள்ள தோழர்களும் வேறு பலரும் புலிகளால் வேட்டையாடப்பட்டுவிட்டனர்.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். தோழர் விசுவானந்ததேவன் 1986ஆம் ஆண்டு வேறு சில தோழர்களுடனும், நெடுந்தீவுக்கு பயணம் மேற்கொண்ட சில பொதுமக்களுடனும் சேர்ந்து இந்தியா செல்வதற்காக படகு ஒன்றில் பயணம் செய்த போது காணாமல் போய் இருந்தார். அவர் பயணம் மேற்கொண்ட படகு சில இரத்தக் கறைகளுடன், அடுத்த நாள் நயினாதீவு கடற்படை முகாமில் காணப்பட்டதாகக் கூறப்பட்டது. அது பற்றி விசுவானந்ததேவனுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற சில படை உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு சிலர் விசாரித்த போது, கடலில் அப்படியான படகு எதனையும் தாம் தாக்கவில்லை என்று கூறப்பட்டதாகவும் தகவல்.

அத்துடன் அந்தப் படகில் பயணம் மேற்கொண்ட இருபதுக்கும் மேற்பட்டவர்களில் ஒருவரது சடலாமாவது எங்குமே கரையொதுங்கவும் இல்லை. சில வட்டாரங்களிலிருந்து தெரிய வந்த தகவல்களின்படி, புலிகளே அந்தப் படகில் சென்ற அனைவரையும் கொலை செய்து எங்காவது ஒரு தீவில் புதைத்திருக்கலாம் என நம்பப்படுகிறது. தோழர் விசுவானந்ததேவனும் அவரது தோழர்களுமே புலிகளது இலக்கு. ஆனால் அவர்களை மட்டும் கொலை செய்துவிட்டு அதில் பயணம் செய்த பொதுமக்களை விட்டுவிட்டால், உண்மை வெளியே தெரிய வந்துவிடும். அதனால் தான் புலிகள் அனைவரையும் தீர்த்துக் கட்டியிருக்கிறார்கள் என்பதே பலரின் ஊகம். இதில் உள்ள உண்மை 'லயன் எயார்' விமானத்தைப் புலிகள் தான் சுட்டு வீழ்த்தினார்கள் என்ற உண்மையைத் தற்பொழுது இராணுவப் பாதுகாப்பில் உள்ள புலி உறுப்பினன் ஒருவன் வெளிப்படுத்தியது போல, யாராவது ஒரு புலி உறுப்பினன் தெரிவித்தால் தான் வெளிச்சமாகும்.

ஆனால் எனக்கு உள்ள சந்தேகம் என்னவென்றால், விசுவானந்ததேவன் என்.எல்.எப்.ரி இயக்கத்தை விட்டு வெளியேறி தனியாக பி.எல்.எப்.ரி இயக்கத்தை உருவாக்கிய போது, அதற்குள்ளும் சில புலி உளவாளிகள் ஊடுருவி இருந்திருக்கிறார்கள். அவர்களே விசுவானந்ததேவன் இந்தியாவுக்குப் பயணம் செய்யும் தகவலைப் புலிகளுக்குக் கொடுத்து அவரை புலிகளிடம் சிக்க வைத்திருக்கிறார்கள்.

விசுவானந்ததேவன் படகு ஏறுவதற்கு முன்பாக கடற்கரையில் விசுவானந்ததேவனின் இயக்க உறுப்பினர்கள் சிலர் நடந்து கொண்ட முறையும், அவர்களில் சிலர் பின்னர் நான் புலிகளின் கைதியாக இருந்த போது, புலிகளால் கைதுசெய்யப்பட்டு நான் இருந்த சிறைக்கு அழைத்து வரப்பட்டதும், அவர்களைப் புலிகள் நடாத்திய விதமும், என்னை விடுதலை செய்யும் நேரத்தில் கபிலம்மான் விசுவானந்ததேவனின் தோழர்கள் பற்றிக் குறிப்பிட்ட சில விடயங்களும் சேர்ந்து, எனக்கு இந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயம் குறித்துப் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுதுவேன்.

ஆனால் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அதாவது மிகுந்த கட்டுப்பாட்டுக்குப் பெயர்போன கம்யூஸ்ட்டுகள் உருவாக்கிய இயக்கத்துக்குள்ளேயே புலிகள் ஊடுருவி 'காரியம்' பார்த்திருக்கிறார்கள் என்றால், மற்றைய சாதாரண தேசியவாத இயக்கங்களுக்குள்ளே என்னென்ன 'பெரிய வேலைகள' எல்லாம் செய்திருப்பார்கள்.

இந்த உண்மைகள் காந்தி போன்ற புலிகளின் முக்கிய நபர்களுக்குத் தெரியாததல்ல. இருந்தும் தெரியாதவர்கள் போல நடித்துக் கொண்டு என்னைக் குடைவதன் நோக்கம், இந்த விவகாரங்கள் எல்லாம் எனக்குத் தெரியுமா என்பதை அறிவதும், எங்காவது ஒரு சிறிய நூல் கிடைத்தால் அதை வைத்துக் கொண்டு, என்னையும் அதில் முடிச்சுப் போடுவதும் தான் புலிகளது நோக்கம். 'கிடந்து நுழைபவனுக்கும் கீழால் நுழைபவனும் இருக்கிறான்' என்ற சிலேடைச் சொற்தொடர் போல, இத்தனை வருட கால அரசியல் அனுபவம் உள்ள நான், இந்த குள்ளப் புலி (நரி)களின் திட்டத்தை அறியாமலா இருப்பேன்?

தொடரும்

முன்னைய பதிவுகள்